<u>சுருக்கம்</u>

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – பொது கட்டடங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான தடையற்ற கட்டடமைப்புகளை ஏற்படுத்தியுள்ள சிறந்த அரசு மற்றும் தனியார் நிறுனங்களுக்கு தலா ஒரு விருது வீதம் இரண்டு மாநில விருதுகள் வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-3.1) த் துறை</u>

அரசாணை (நிலை) எண்.17 நாள்: 04.07.2022

ஸ்ரீ பிலவ ஆனி -20 ,

திருவள்ளுவர் ஆண்டு,2053

படிக்கப்பட்டது:

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2022-2023-ஆம் நிதியாண்டில் 21.04.2022 அன்று சட்டமன்ற கூட்டத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள்
2. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் .கடித எண். 3651/ உ.உ.பிரிவு/2022, நாள் 22.04.2022.

•••••

<u>ஆணை:</u>

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்ந்த மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏனைய அறிவிப்புகளுடன் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:-

> மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016, பிரிவு 45(1)-இன்படி அனைத்து பொதுகட்டடங்களும் மாற்றுத்திறனாளிகளின் பயன்பாட்டிற்கு உகந்தவையாக மாற்றி அமைக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே, அரசு, தனியார் நிறுவனங்கள், தங்களுடைய கட்டடங்களில் மாற்றுத்திறனாளிகளின் பயன்பாட்டிற்கு தடையில்லா சூழலுக்கான வசதிகளை சிறப்பாக அமைப்பதை ஊக்குவிக்க இவ்விருதுகள் வழங்கப்படும்.
>
> ஒவ்வொரு ஆண்டும் சிறந்த பொது நிறுவனத்திற்கான விருது, சிறந்த தனியார் நிறுவனத்திற்கான விருது என இரண்டு விருதுகள் 10 கிராம் தங்கப்பதக்கம், பாராட்டு சான்றிதழுடன் ரூ.1.60 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்படும்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடிதத்தில் மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பிற்கிணங்க இரு மாநில விருதுகளையும், தகுதிகளின் அடிப்படையில் தேர்வு செய்து, ஒவ்வொரு ஆண்டும் சுதந்திரத் தினத்தன்று வழங்க அனுமதித்தும், மேலும் தகுதிகளின் அடிப்படையில், விருது பெறும் விருதாளர்களுக்கு தலா 10 கிராம் தங்கப்பதக்கம் (22 காரட்) மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கத் தேவைப்படும் தொகையான ரூ.1.60 இலட்சத்தை ஒதுக்கீடு செய்தும் ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்னர் கீழ்காணும் தகுதிகளுடன் பொது கட்டடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான தடையற்ற சூழலை ஏற்படுத்தியுள்ள சிறந்த அரசு / தனியார் நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினத்தன்று (டிசம்பர்-3) இரு மாநில விருதுகளை வழங்கவும், இவ்வாறு தெரிவு செய்யப்படும் விருதாளர்களுக்கு தலா 10 கிராம் தங்கப்பதக்கம் (22 காரட்) மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கவும் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநருக்கு அனுமதி அளித்தும் மற்றும் அதற்கு தேவைப்படும் தொகையான ரூ.1,60,000/- (ரூபாய். ஒரு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது:-

**I. விருதுக்கான தகுதிகள்:-**

(i) மேற்படி இவ்விருதுகளை பெறுவதற்கான கீழ்க்கண்ட தகுதிகள்/ விதிமுறைகளுக்கு உட்பட்டு விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, அரசுத்துறை மற்றும் அரசு சார்ந்த வாரியங்கள், உள்ளாட்சிக்கு உட்பட்ட நிறுவனங்கள், குழுமங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றிற்கு ஒரு விருதும், அரசு அல்லாத இதர தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலை வர்த்தக நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு ஒரு விருதும் வழங்கப்படும்.

(ii) பொதுக் கட்டடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு தடையற்ற சூழல் ஏற்படுத்துவது தொடர்பாக மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் விதிகள் 2017-ன்படி ஒன்றிய அரசால் அவ்வப்போது வெளியிடப்படும் வழிகாட்டுதலின் அடிப்படையில் மாநில விருதுக்கான நிறுவனங்கள் தேர்வு செய்யப்படவேண்டும்.

"ஒன்றிய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டுதலான Harmonised Guidelines and Space Standards for Barrier Free Built Environment for Persons with Disability and Elderly Persons – By Ministry of Urban Development – Government of India" குறிப்பிட்டுள்ள ஏனைய வசதிகளில் பின்வரும் வசதிகள் அமைத்திருக்க வேண்டும்:-

(a) மாற்றுத்திறனாளிகள் எளிதில் பயன்படுத்தக் கூடிய வகையில் பிரதான நுழைவு வாயிலில் கைப்பிடிகளுடன் கூடிய சாய்தளம் போதுமான அளவில் இருக்கவேண்டும்.

(b) வரவேற்பறை / தகவல் அளிக்கும் மையம் மாற்றுத் திறனாளிகள் எளிதில் அணுகக்கூடிய வகையில் இருக்க வேண்டும்.

(c) மாற்றுத்திறனாளிகள் எளிதில் அணுகும் வகையில் தாழ்வாரங்களின் அகலம் குறைந்தப்பட்சம் 1500 மி.மீ ஆக இருக்க வேண்டும்.

(d) கட்டடங்களில் மின்தூக்கிகள் இருக்கும் பட்சத்தில் அதன் கதவுகள் 1 மீட்டர் அகலத்தில் இருக்கவேண்டும்

(e) படிக்கட்டுகளின் அகலம் 1200 மி.மீ ஆகவும், அவற்றின் இருபுறங்கலும் பிடிமான கைபிடிகளுடன் இருக்க வேண்டும்

(f) மாற்றுத்திறனாளிகள் எளிதில் அணுகும் வகையில் கழிவறை வசதிகள் ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

(g) சிற்றூண்டி உணவகம் இருக்கும்பட்சத்தில், மாற்றுத்திறனாளிகள் எளிதில் அணுகும் வகையில் இருக்க வேண்டும்

(h) சக்கர நாற்காலியினை பயன்படுத்தும் மாற்றுத் திறனாளிகள், உணவகத்தை எளிதில் அணுகும் வகையில் சிற்றுண்டியினை சுற்றி செல்ல ஏதுவாக 900 மி.மீ அகலத்தில் பாதை இருக்கவேண்டும்

(i) குடிநீர் குழாய்கள் மாற்றுத்திறனாளிகள் எளிதில் அணுகக் கூடியதாக இருக்க வேண்டும்.

(j) நடைபாதைகளை மாற்றுத்திறனாளிகள் எளிதில் கண்டறியும் வகையில் அடையாளக் குறியீடுகளுடன் இருத்தல் வேண்டும்.

(k) அவசரகால வெளியேற்றங்கள் இருக்கும்பட்சத்தில், அவை, திசை அம்புக்குறிகளுடன் தெளிவாக குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(l) மாற்றுத்திறனாளிகளுக்கென தனியே அடையாள குறியீடுகளுடன் கூடிய வாகனம் நிறுத்துமிடம் இருக்கவேண்டும்.

## II. <u>விண்ணப்பிக்கும் முறை</u> :

1. விண்ணப்பதாரர்கள் அந்தந்த மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில், தடையற்ற சூழல் ஏற்படுத்தியதற்கான சான்றாக உரிய புகைப்படங்களுடன் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க வேண்டும்.

2. சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து விண்ணப்பங்களும் அந்தந்த மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் மற்றும் அதே மாவட்டத்தினை சார்ந்த இத்துறையில் அனுபவம் வாய்ந்த ஏதேனுமொரு மாற்றுத் திறனாளிகள் நலன் சார்ந்த சங்கத்துடன் இணைந்து அக்கட்டடங்களை நேரடியாக

சென்று தடையற்ற சூழலுக்கான சரிபார்ப்பு பட்டியலின் அடிப்படையில் சரிபார்த்திட வேண்டும்.

3. மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சரிபார்த்தபின், இவ்விருதுக்கான விண்ணப்பங்கள் அந்தந்த மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன், மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

III. இவ்விருதுகளைத் தெரிவு செய்யும் மாநில விருது தெரிவுக்குழுவில் பொதுப்பணித்துறையைச் சார்ந்த பொறியாளர் மற்றும் கட்டிட வல்லுநர் ஆகியோர் கூடுதல் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுவர்.

IV. இவ்விருதுகள் ஒவ்வொரு ஆண்டும் அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினத்தன்று (டிசம்பர்-3) வழங்கப்படும்.

4. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:-

**"2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 -சமூக நலன்— 001 - நெறிப்படுத்தலும் நிருவாகமும் மாநிலச் செலவினங்கள் AF - மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம் – 359 – பரிசுகளும் வெகுமதிகளும் – 01 - பரிசுகளும் வெகுமதிகளும்**
**(IFHRMS DPC 2235 – 02 – 001–AF – 35901)**

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.1,60,000/- ஐ 2022-2023 ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2022-2023 – ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது நிதி (சந)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.31069 / நிதி (ச.ந)த் துறை / 2022, நாள் 30.06.2022-ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 0564 (ஐந்நூற்று அறுபத்து₹ நான்கு) (IFHRMS ASL No.2022060564)

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா.ஆனந்தகுமார்
அரசு செயலாளர்

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சென்னை -05.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை- 18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை- 35.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை -09.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை -09.
முதுநிலை தனிச் செயலாளர், மாண்புமிகு அமைச்சர்
நிதி மற்றும் மனித வள மேலாண்மை, சென்னை -09.
தலைமைச் செயலாளரின் முதுநிலை முதன்மை
தனிச் செயலாளர், சென்னை -09.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை
முதன்மை தனிச் செயலாளர், நிதித்துறை, சென்னை -09.
அரசு செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலாளர்,
மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சென்னை -09.
நிதி (ச.ந) / வ.செ.பொது-II /வ.வ-I )த் துறை, சென்னை – 09.
உதிரி நகல் / இருப்புக்கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
04/07/2022